# நவம்பர் மாதப் பாடப் பகுதிகள்

இயல் : 6

செய்யுள் : ☆ விருந்தோம்பல்

உரைநடை : திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

துணைப்பாடம் : திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

இலக்கணம் : வழக்கு

கடிதம் : சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி தந்தைக்குக் கடிதம்

## செய்யுள் - விருந்தோம்பல்

### I குறுவினா :

1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.

பாரி மகளிரின் பெயர்கள் அங்கவை, சங்கவை ஆகும்.

2. 'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' - எவ்வாறு?

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். பாரி மகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர்.

அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

### II புத்தகப் பயிற்சி :

பக்க எண் : 111 - படிக்க வைத்தல்

# உரைநடை

## திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

I குறுவினா :

1. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் :

* பச்சையாறு
* மணிமுத்தாறு
* சிற்றாறு
* காரையாறு
* சேர்வலாறு
* கடனா நதி

2. கொற்கை முத்து பற்றி எழுதுக.

தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் இருந்தது. இங்கு முத்துக் குளித்தல் சிறப்பாக நடைபெற்றதாகத் தமிழ் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது.

II சிறுவினா : புத்தகத்தைப் பார்த்துப் படிக்க வைத்தல்

III புத்தகப் பயிற்சி : பக்க எண் : 116 - படிக்க வைத்தல்.

## துணைப்பாடம்

### திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

துணைப்பாடப் பகுதி செயல்பாடாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

# இலக்கணம் – வழக்கு

## நிரப்புக :

1. எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை வழக்கு எனப்படும்.
2. இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என வழக்கு இரண்டு வகைப்படும்.
3. ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களால் குறிப்பிடுவது இயல்பு வழக்கு எனப்படும்.
4. இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.
5. இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கணம் உடையது ஆகும்.
6. இலக்கண முறைப்படி அமையாவிட்டாலும் இலக்கணமுடையவை போலவே ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப் போலி எனப்படும்.
7. இலக்கணப் போலியை முன்பின்னாகத் தொக்கப்போலி எனவும் குறிப்பிடுவர்.
8. சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து இடம்பெற்று அதே பொருள் தருவது எழுத்துப்போலி எனப்படும்.
9. எழுத்துப்போலி மூன்று வகைப்படும்.
10. சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது முதற்போலி ஆகும்.
11. சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது இடைப் போலி ஆகும்.
12. சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது கடைப் போலி ஆகும்.

Scanned with OKEN Scanner

13. ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி எனப்படும்.

14. இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.

15. ஏதேனும் ஒரு காரணத்தினால் பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது தகுதி வழக்கு ஆகும்.

16. தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

17. பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது இடக்கரடக்கல் ஆகும்.

18. மங்கலமில்லாத சொற்களை வேறு சொற்களால் குறிப்பதை மங்கலம் என்பர்.

19. ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சொற்கள் குழூஉக்குறி எனப்படும்.

20. பொற்கொல்லர் பொன்னைப் பறி என்பர்.

II உதாரணம் தருக.

1. இலக்கணம் உடையது - நிலம், மரம்
2. கடைப்போலி - பந்தர்
3. இலக்கணப் போலி - புறநகர்
4. மரூஉ - கோவை
5. இடக்கரடக்கல் - கால் கழுவி வந்தான்
6. மங்கலம் - வெள்ளாடு

Scanned with OKEN Scanner

## III கூறியவாறு செய்க.

1. விளக்கை அணை (மங்கலச் சொல்லாக மாற்றுக)
   விளக்கைக் குளிரவை
2. தஞ்சாவூர் (மரூஉ சொல்லாக்குக)
   தஞ்சை
3. மயல் (முதற்போலியாக மாற்றுக)
   மையல்
4. நஞ்சுள்ள பாம்பு (மங்கலச் சொல்லாக மாற்றுக)
   நல்ல பாம்பு
5. ஐந்து (முற்றுப் போலியாக மாற்றுக)
   அஞ்சு

## IV இலக்கணக் குறிப்பு தருக.

1. வான் - இலக்கணம் உடையது
2. இலைஞசி - இடைப்போலி
3. திருமுகம் - மங்கலம்
4. பறி - குழூஉக்குறி
5. கால்வாய் - இலக்கணப் போலி
6. அரையர் - இடைப்போலி

# கடிதம்

சுற்றுலா செல்ல அனுமதியும், பணமும் வேண்டி தந்தைக்கு கடிதம் எழுதுக.

எண் : 30 காந்தி நகர்,
சாலி கிராமம்,
சென்னை - 600 089

அன்புள்ள தந்தைக்கு,

தங்கள் அன்பு மகள் எழுதுவது. நான் நலம். அது போல் தங்கள் நலமும் அம்மா, தம்பி நலமும் அறிய ஆவல். நான் நடந்து முடிந்த தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளேன். வரும் அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் எங்கள் பள்ளியில் கன்னியாகுமரிக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல உள்ளனர். எனவே அன்புக் கூர்ந்து எனக்கு சுற்றுலா செல்ல அனுமதி அளிப்பதுடன் பணத்தையும் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்பு மகள்
திவ்யா

உறைமேல் முகவரி :

பெறுநர்,
திரு. முருகன்,
10, மேலமாசி வீதி,
மதுரை